**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**

**மேட்டூர்.**

**OS.No.** 116/2017

**வழக்கு சாட்சி PW.3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தங்கவேல் | கணவர் பெயர் | : -- |
| தகப்பனார் பெயர் | சித்தையன் | வயது | : 59 |
| கிராமம் | சேலம்கேம்ப் | நாள் | : 24.11.2025 |
| தாலுகா | மேட்டூர் | | |
| மாவட்டம் | சேலம் | | |

<u>முதல் விசாரணை :</u>

நான் இவ்வழக்கில் 3ம் தரப்பினர் ஆவேன். வாதி தரப்பில் 3வது சாட்சியமாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் இன்று தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவையாகும். (ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை).

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:

1. நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை ஏதேனும் வழங்கப்பட்டதா என்றால் இல்லை. வாதிகள் கேட்டுக்கொண்டதால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேனா என்றால் ஆமாம். 1ம் வாதி சண்முக ஆசாரி என் பக்கத்து வீட்டுக்காரர் ஆவார். 1995ம் வருடத்தில் இருந்தே எனக்கு அவரை தெரியும். வழக்கு சொத்து எந்த வகைபாடு சொண்ட சொத்து என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு 08.12.2025ம் தேதி ஒத்திவைக்கப்படுகிறது.

ஒம்/-திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.